TAMIL NADU LEGISLATURE LIBRARY
23 JUN 1973
MADRAS

தமிழ்நாடு சட்டப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1973 மார்ச் 2.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Training in First Aid for students

*208 *Q*.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to give compulsory training in first-aid to students in (1) High Schools and (2) Colleges in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

THIRU N. DENNIS : Sir, in view of the complexities of the metropolitan society, will the Government come forward to equip our youngmen with this kind of education as the investment for imparting this education is much less?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எல்லா மாணவர்களுக்கும் கட்டாயமாக முதல் உதவி பயிற்சி அளிக்கின்ற முயற்சி இல்லை என்று குறிப்பிட்டேன். ஆனால் என்.சி.சி.-யில் சேர்ந்திருக்கிற மாணவர்களுக்கும், கல்லூரி, பள்ளிகளில் படிக்கின்ற சாரணர் இயக்கத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கும் இத்தகைய பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : இப்பொழுது மாணவர்களுக்கு போக்கு வரத்தை ஒழுங்குபடுத்தும் பயிற்சி எல்லாம் புதியதாக அளிக்கப்பட்டு வருகிறது. ஆகவே, அதே அடிப்படையில் முதல் உதவித் திட்ட பயிற்சியைக் கொஞ்சம் விரிவுபடுத்தி, அதிலும் மாணவர்கள் பயிற்சி பெறுவதற்கு வழி செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் முதலில் குறிப் பிட்டபடி என்.சி.சி. பிரிவு, ஸ்கவுட்ஸ் பிரிவு இதில் சேர்ந்திருக்கும் மாணவர் களுக்கு இந்தப் பயிற்சி கட்டாயமாக சொல்லிக் கொடுக்கப்பட்டு வருகிறது. சில பள்ளிகளில் அவர்களே முயற்சி எடுத்து, முதல் உதவிப்பயிற்சி அளிக்கப் பட்டு வருகிறது. கேள்வி எல்லாப் பிள்ளைகளுக்கும் கட்டாயமாகச் சொல்லிக் கொடுக்கப்படுமா என்பது தான். அதற்கான செயற்குறிப்பு எதுவுமில்லை. சில பள்ளிகளில் அவர்களே முன்வந்து இந்தப் பயிற்சியைச் சொல்லித் தருகிறார்கள்.

திரு. கே. எ. வகாப் : இப்பொழுது பள்ளிகளில் சாரணர் இயக்கம் அதிகப் படியாகச் செயல்படுத்தப்படாத நிலையில் இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட முதல் உதவிப் பயிற்சி தருகிற விதத்தில் சாரணர் பயிற்சி பெறுகின்ற மாணவர்களை இன்னும் அதிகப்படியாகச் சேர்ப்பதற்கு ஏதேனும் செயற் குறிப்பு அரசிடம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எல்லா உயர்நிலைப் பள்ளி களிலும் சாரணர் இயக்கம் அமைக்க வேண்டும் என்ற ஒரு நோக்கம் உண்டு. அதற்கான முயற்சியை சாரணர் இயக்கம் எடுத்து வருகிறது.

மாலைநேரக் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பு வகுப்புகள்

*** 209 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாலைநேரக் கல்லூரிகளில் பட்டப் பிற்காலப் படிப்பு (Post-Graduate Course) இவ்வாண்டு துவக்கப்பட்டு உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : மாலை நேரக் கல்லூரிகளில் பட்டப் பிற்காலப் படிப்பு (போஸ்டு கிராஜுவேட் கோர்ஸ்) இனிமேலாகிலும் துவக்கி நடத்து வதற்கு அரசு ஆலோசிக்குமா ? இதுவரையில் மாலைநேரக் கல்லூரிகளில் எந்த வகையான பட்டங்கள் தரப்படுகின்றன என்று அறிய இயலுமா ?